**S.C.No**. 19/2022 **PW**.4 – மோகன்ராஜ் 15.10.2024

(1 ம் எதிரி கனகராஜ், 2 ம் எதிரி சந்தோஷ்குமார், 3 ம் எதிரி பிரகாஷ் ஆகிய 1 முதல் **3** எதிரிகள் ஆஜர்.

**4 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).**

**Crl.M.P.980/2024 ல் பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கதவு எண். 110, பிள்ளைநகரில் உள்ள வீடு எனது பெயரில் உள்ளது என்பதற்கு நான் போலீசாரிடம் ஆவணங்களை ஒப்படைக்கவில்லை. நான் 1 ம் எதிரியிடம் எழுத்து பூர்வமான வாடகை ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. நான் ரூ.3000/- வாடகை பெற்றேன் என்பதற்கு ரசீது கொடுக்கவில்லை. 1 ம் எதிரியும், 4 மற்றும் 5 எதிரிகளும் என் வீட்டில் வாடகைக்கு குடியிருக்கவில்லை என்றும், நான் அவர்கள் குடியிருந்தார்கள் என பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1 ம் எதிரி 4 ம் எதிரியை தன் மனைவி என்றும், 5 ம் எதிரியை தன் மாமியார் என்றும் கூறினார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் அரிசி வியாபாரம் செய்கிறேன். நான் அரிசி வியாபாரம் செய்வதால், போலீசார் உதவி வேண்டும் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 ம் எதிரியை நான் போலீசார் சொல்லிக்கொடுத்து அடையாளம் காட்டினேன் என்றால் சரியல்ல.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

மறு விசாரணை இல்லை.

(1 ம் எதிரி கனகராஜ், 2 ம் எதிரி சந்தோஷ்குமார், 3 ம் எதிரி பிரகாஷ் ஆகிய 1 முதல் **3** எதிரிகள் ஆஜர்.

**4 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).**

**Crl.M.P**.980/2024 ல் பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1 ம் எதிரி கனகராஜை நான் பார்த்துள்ளேன் என சொல்வது பொய் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

(1ம் எதிரி கனகராஜ், 2ம் எதிரி சந்தோஷ்குமார், 3ம் எதிரி பிரகாஷ் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**4 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).**

**Crl.M.P.**980/2024ல் பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

காவல்நிலையத்திலிருந்து என்னை அழைத்தபிறகு, நான் என் உயரதிகாரிகளுக்கு எழுத்து பூர்வமாக தகவல் கொடுக்கவில்லை. தொலைபேசி மூலமாக தகவல் கொடுத்தேன். அயல்பணிக்கு சென்று வந்தபிறகு, உயரதிகாரிகளுக்கு நான் அறிக்கை கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் வெளிப்பணிகளுக்கு சென்றுவந்தது சம்மந்தமாக எனது உயரதிகாரிகளுக்கு நான் அறிக்கை கொடுக்க வேண்டுமென்றும், அதை நான் மறைக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் எதிரி கனகராஜ் வீடு என்ன வீடு என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் வீடு ஆர்.சி.சி.மோல்டு வீடு. மோட்டார் ரூம் வடகிழக்கு மூலையில் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும், 1ம் எதிரி கனகராஜ் வீட்டில் மோட்டார் ரூம் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி வீடு லாகட வீடு என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன விதத்தில் 1 முதல் 4 எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அதனடிப்படையில் சான்றுபொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலங்கள், கைப்பற்றுதல் மகஜர்கள் ஆகியவை ஏற்கனவே காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டிருந்தன என்றும், அவற்றில் நான் காவல்நிலையத்திற்கு சென்று கையெழுத்திட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. சான்றுபொருட்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து ................

உருவாக்கப்பட்டவை என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க, போலீசார் சொல்லிக்கொடுத்து, போலீசாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன விதத்தில் நான் எங்கும் செல்லவில்லை என்றும், அதனால்தான் நான் சட்டப்படியான விதிமுறைகளை கடைபிடிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்